www.Padasalai.Net

# இரண்டாம் பருவ இடைத்தேர்வு – 2022

வகுப்பு – 11 **உயிரியியல்** மதிப்பெண் : 50

காலம் : 1.30 மணி

## உயிரி தாவரவியல் (மதிப்பெண் 25)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. ஜிம்னோஸ்பெர்ம்களில் சல்லடை செல்களை கட்டுப்படுத்துவது எது?
   அ) அருகாமையிலுள்ள சல்லடை குழாய்கள் ஆ) ஃபுளோயம் பாரன்கைமா செல்கள்
   இ) துணைச் செல்களின் உட்கருக்கள் ஈ) அலபுமீன்ஸ் செல்களின் உட்கருக்கள்
2. தாவர உள்ளமைப்பியலின் தந்தை யார்?
   அ) ஈசா ஆ) நெகேமியா இ) லின்னேயல் ஈ) லீவென்வேஹாக்
3. வழக்கமாகக் குப்பி தக்கை எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
   அ) ஃபெல்லம் ஆ) ஃபெல்லோஜென் இ) சைலம் ஈ) வாஸ்குலார் கேம்பியம்
4. தாவரத்தின் உயிருள்ள பகுதி எது?
   அ) வைரக்கட்டை ஆ) வன்கட்டை இ) மென்கட்டை ஈ) சாற்றுக்கட்டை
5. இலைத்துளைத் திறப்பு எதைச் சார்ந்தது?
   அ) பொட்டாசியம் அயனியின் உள்நுழைவு ஆ) லெண்டிசெல்
   இ) பொட்டாசியம் அயனியின் வெளியேற்றம் ஈ) குளோரைடு அயனியின் உள்நுழைவு

**II. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 x 2 = 6

6. ஸ்கிலிரன்கைமா மற்றும் ட்ரக்கீசென் ஏன் இறந்த செல்களாக கருதப்படுகிறது?
7. எந்த பருவத்தில் ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரங்களில் வெசல்கள் பெரியதாக இருக்கும்?
8. நைட்ரஜன் வளிமண்டலத்தில் அதிகம் இருந்தாலும் தாவரங்கள் அதனைப் பயன்படுத்த முடிவதில்லை ஏன்?
9. நீரியல் திறனைக் கட்டுப்படுத்தும் கூறுகள் யாவை?
10. சாற்றுக்கட்டை என்றால் என்ன?
11. தாவரத்தில் சுக்ரோஸினை பெறும் ஒளிச்சேர்க்கை செய்யவியலாத பகுதிகளை பட்டியலிடுக.

### பகுதி – இ

**III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. (வினா எண். 14 கட்டாய வினா)** 3 x 3 = 9

12. ஒரு விதையிலை வேருக்கும், ஒரு விதையிலை வேருக்கும் இடையே உள்ள உள்ளமைப்பியல் வேறுபாடுகளை எழுதுக.
13. தொடர்ந்து பகுப்படையும் திசு ஆக்குத்திசுவாகும். பக்க ஆக்குத்திசுவின் செயல்பாட்டை இதனுடன் தொடர்புபடுத்துக.
14. நைட்ரஜன் நிலைநிறுத்தத்தில் நைட்ரோஜினேஸ் நொதியின் பங்கினை விவரி.
15. திசுவமைப்பியல் என்றால் என்ன?
16. லெண்டிசெல் – சிறு குறிப்பு வரைக.
17. பரவல் என்றால் என்ன?

**IV. ஏதேனும் ஒரு வினாவிற்கு விரிவான விடையளி.** 1 x 5 = 5

18. அ) ஆஞ்சியோஸ்பெர்ம்களின் பூச்சியுண்ணும் உணவூட்ட முறையினை விவரி? (அல்லது)
    ஆ) ஸ்கிலிரங்கைமா மற்றும் கோலங்கைமா இவற்றுக்கிடையேயான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net

# உயிரி விலங்கியல் (மதிப்பெண் 25)

## பகுதி – அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1. எதிரோட்ட பரிமாற்ற முறை வழியாக மெடுலாவின் ஊடுகலப்பு வேறுபாட்டை பராமரிப்பது.
   அ) ஜக்ஸ்டா மெடுல்லாரி நெஃப்ரான்கள் ஆ) ஏட்ரியல் நேட்ரி யூரிடிக் காரணி
   இ) ரெனின் - ஆஞ்சியோடென்சின் ஆல்டோஸ் டீரான் முறை ஈ) வாசா ரெக்டா
2. சிறுநீர் உருவாதலில் தொடர்புடைய இரண்டு கூற்றுகளையும் ஆராய்ந்து பதிலை தேர்வு செய்க.
   கூற்று 1 : கிளாமருலார் இரத்த அழுத்தம் மற்றும் ஓட்டம் குறையும் போது ரெனினை சுரக்கச் செய்ய ஜக்ஸ்டா கிளாமருலர் செல்கள் தூண்டப்படுகிறது.
   கூற்று 2 : ஏட்ரியல் நேட்ரி யூரிடிக் பெப்டைடு சிறுநீரகத்தை அடைந்து அங்கு $Na^+$ அயனிகளின் மீள உறிஞ்சப்படுதலை அதிகரிக்கிறது.
   அ) கூற்று 1ம் 2ம் சரி ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
   இ) கூற்று 1 தவறு கூற்று 2 தவறு ஈ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
3. கீழே காணப்படுவனவற்றில் எதில் சாட்டை போன்ற இயக்க உறுப்பின் மூலம் இயக்கம் நடைபெறுகிறது.
   அ) மனித சுவாசப் பாதையில் அமைந்துள்ள எபிதீலிய செல்களில்
   ஆ) மனித இனப்பெருக்க பாதையில் அமைந்துள்ள எபிதீலிய செல்களில்
   இ) மனித இனப்பெருக்க பாதையில் காணப்படும் விந்து செல்களில்
   ஈ) மனித கற்றோட்ட மண்டலத்தில் உள்ள வெள்ளை செல்களில்
4. எதனுடனும் இணைக்கப்பட்டிராத தொண்டைக்குழியின் அடியில் காணப்படும் 'U' வடிவ எலும்பு எது?
   அ) எத்மாய்டு எலும்பு ஆ) நாவடி எலும்பு இ) ஆப்புருவ எலும்பு ஈ) இடைநாசி எலும்பு
5. கீழே கொடுக்கப்பட்டவைகளில் மனித மைய நரம்பு மண்டலத்தில் காணப்படாதது எது?
   அ) உட்செல் நியூரான்கள் ஆ) வெளிச்செல் நியூரான்கள்
   இ) இடைநியூரான்கள் ஈ) நியூரோகிளியல் செல்கள்

## பகுதி – ஆ

II. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 x 2 = 6

6. புறணிப்பகுதி நெஃப்ரான்கள் மற்றும் ஜக்ஸ்டா மெடுல்லரி நெஃப்ரான்கள் என்பவை யாவை?
7. மனித கபால எலும்பின் பெயர்களை கூறு?
8. யூரோமியா நிலை என்றால் என்ன?
9. ஆக்ஸான் மேடு என்பது என்ன?
10. நாரிணைப்பு மூட்டுக்கள் என்றால் என்ன? அது மனிதனில் எங்கு காணப்படுகிறது.

## பகுதி – இ

III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. (வினா எண். 12 கட்டாய வினா) 3 x 3 = 9

11. நரம்பு செல்களை அதன் ஆக்ஸலான் மற்றும் டென்ட்ரைட்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்துக.
12. ஒரு சிறு பலமுனை நரம்பு செல் அல்லது மனித சிறுநீரகத்தின் நீள்வெட்டு தோற்றம் படம் வரைந்து பாகங்கள் குறி.
13. மனித எலும்புத் தசையின் சுருக்கத்தின் வகைகளை விவரி?
14. மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளும் ஒரு மனிதனின் வெற்றிக்கு பெரிதும் உதவுவது எவ்வகை எலும்புத் தசையாக இருக்கும். எப்படி?
15. லிம்பிக் மண்டலம் ஏன் உணர்ச்சி மூளை எனப்படுகிறது. அதன் பகுதிகளை கூறுக.

## பகுதி – ஈ

IV. விரிவான விடையளி. 1 x 5 = 5

16. அ) சறுக்கு இழை கோட்பாட்டின் படி தசை சுருங்கும் விதம் பற்றி படத்துடன் விவரி. (அல்லது)
    ஆ) சிறுநீரகத்தின் பணிகள் எவ்வாறு நெறிப்படுத்தப்படுகிறது என்பதை விவரி.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner